உ
சிவமயம்







# அமரர்
# திருமதி அம்பிகாவதி சிதம்பரப்பிள்ளை
# அவர்களினது
# சிவபதப்பேறுகுறித்த நினைவுமலர்

## 20-02-2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வடமராட்சி கிழக்கு உடுத்துறைதெற்கை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்

# திருமதி அம்பிகாவதி சிதம்பரப்பிள்ளை

## அவர்களினது

## சிவபதப்பேறு குறித்த நினைவுமலர்

# 20-02-2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மலர் விளக்கம்

உடுத்துறை மூத்தகுடி
உயர் உழவர் குல அமரர்
திரு. சின்னத்துரை கிருஷ்ணபிள்ளையின்
ஏக புத்திரியாக 1940 ஆம் ஆண்டு
ஜூலை மாதம் 23ஆம் திகதி
அம்பிகாவதி பிறந்தார். கண்டாவளையை
சேர்ந்த பொன்னையா சின்னம்மா இவர் தம்
தாயார். 1959ஆம் ஆண்டு மார்ச் மாதம்
29ஆம் திகதி கண்டாவளையைச் சேர்ந்த
அதிபர் தம்பு சிதம்பரப்பிள்ளையை
மணமுடித்தார். இவர் சிறந்த
இல்லத்தரசியாகவும் பாசம் மிகுந்த
அன்னையாகவும் அன்பான பாட்டியாகவும்
விளங்கியதுடன் நிமிர்ந்த நடையும்,
நேர்கொண்ட பார்வையும், இரக்க குணமும்
இவரின் தனித்துவமான அடையாளங்களாக
இருந்தன. இறைபக்திமிக்கவரான திருமதி
அம்பிகாவதி சிதம்பரப்பிள்ளை 2022 ஆம்
ஆண்டு சனவரி 21 ஆம் திகதியன்று
அதிகாலை 4.30 மணியளவில் கொழும்பில்
சிவபதம் எய்தினார். அவர் தம் ஆத்ம
சாந்திக்காக அவரின் அந்தியேட்டி
தினமான 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி
மாதம் 20 ஆம் திகதி இம்மலர்
வெளியிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணுலகில்
23
07
1940

விண்ணுலகில்
21
01
2022

## அமரர்.
## திருமதி அம்பிகாவதி சிதம்பரப்பிள்ளை

# திதி நிர்ணய வெண்பா

தமிழ் பிலவ ஆண்டு மிளிர்ந்திடும்
தைத்திங்கள் எட்டாம் நாளில்
சித்தமாய் அமைந்திட்ட அபர பக்கத்து
திருதியை திதிய நாளில் உத்தமியாள்
அம்பிகாவதி உயிர் நீத்த
நன்னாள் என்றறிவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

உடுத்துறை என்னும் அழகிய ஊர் தந்த தெய்வப்புதல்வி, பாரம்பரியத்தையும் உழுதுண்டு வாழும் தமிழர் பண்பாட்டையும் பறைசாற்றும் தொக்கடியார் பரம்பரையில் வந்துதித்த வீரகத்தி சின்னத்துரையரின் ஒரே வாரிசான வம்ச விளக்கு, வையத்தில் எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழவைக்க அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, இரவைப் பகலாக்கி இரத்தத்தைப் பாலாக்கி பாலூட்டிச் சீராட்டி அன்பு முத்தம் தந்து அறிவுக்குக் கல்வி தந்து தக்க துணை தேடித்தந்து தரணியில் எமக்கெல்லாம் உயர் வாழ்வு தந்து நாம் நோயுற்று பாயில் படுத்தால் ஊண் உறக்கம் மறந்து எம்மைக் காத்து எம் அனைவரதும் நல்வாழ்வுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்த அன்புத்தெய்வம் எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சென்று விட்டார். அன்னாரை எம் இதயக்கமலத்தில் நிறுத்தி நெஞ்சுருக கண்ணீர் சிந்தி கைதொழுது நெய்விளக்கேற்றிடும் இவ்வேளையில் அமரர் அம்பிகாவதி சிதம்பரப்பிள்ளை அவர்கள் தம் சிவசாரூப்பியப்பேற்றினைக் குறித்து அமரர் தம் நித்திய ஆத்ம சாந்திக்காக வெளியிடப்படும் "அம்பிகாவதி நினைவு மலர்" என்னும் இந்நினைவு மலர் அமரர் தம் பாதங்களுக்கே சமர்ப்பணம் என்கூறி காணிக்கையாக எம் கண்ணீர்ப் பூக்களையும் சொரிந்து அமரர் தம் பாதாரவிந்தங்களில் சமர்ப்பணம் செய்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
"அலுமாரிசு ஞானவைரவர் வளவு"
உடுத்துறை தெற்கு
தாளையடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவணக்கம்

## ஞானவைரவர் துதி

இயற்கை எழில் கொஞ்சும் அழகூராம் உடுத்துறையில்
சிறப்புறவே பதியமர்ந்த ஞானவைரவரை
ஐரோப்பியரிடமிருந்து பாதுகாக்க அலுமாரியில் ஒழித்துவைத்து
அடியவர்க்கு அனுதினமும் அருள்கொடுத்த வைரவரை
நாளெல்லாம் தொழுது பொழுதெல்லாம் பணிவிடைகள் பல
புரிந்தநற்குணத்து நாயகியாம் அம்பிகாவதி தன்னை நின்பதம்
அழைத்திட்ட வைரவரே காத்தருள்வாய்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னையின் பெருவாழ்வு

இந்து சமுத்திரத்தின் நித்திலமாம் இலங்கை நாட்டின் வடமாகாணத்தில், வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள அழகுகொஞ்சும் ஊராம் உடுத்துறை. வடக்கே ஒரு கிலோமீட்டர் தூரத்தில் அழகிய இந்து மகா சமுத்திர பாக்குநீரிணை தெற்கில் தொண்டைமனாற்று கடல் நீரேரி, அதனிடையே தென்னை பனை மரங்களை வரிசையாகக் கொண்ட மேட்டுக்காணிகள், பச்சைப் பசேலென நெல்வயல்கள் மற்றும் பரந்து விரிந்த வெண்மணல் முற்றங்கள், நாவல்மரங்கள், வீரைமரங்கள், ஈச்சமரங்கள், விராலி ,பாவட்டை, கருப்பை, கினியா பற்றைகள் என இயற்கையழகு செழித்து விளங்கும் உடுத்துறை தெற்கின் சீர்கொண்ட சைவமரபு மூத்தகுடியில் வந்துதித்தார் தொக்கடியார் என செல்லமாக அழைக்கப்பட்ட சேதர் மகன் வீரகத்தியார்.

திரு. சேதர் வீரகத்தி, சின்னட்டி மகள் தெய்வானையை மணமுடித்து 1888ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் ஆறாந்திகதி சின்னத்துரை என்னும் மகனைப் பெற்றெடுத்தனர். அவர்தம் இன்னாரு மகனாம் திரு.வீரகத்தி சேதர். திரு. வீரகத்தி சின்னத்துரை தமது தந்தையின் இறுதிக்காலம்வரை அவருடன் வாழ்ந்து தந்தை மெச்சும் தனயனாய்த் திகழ்ந்தார். வானுயர்ந்த தென்னைகள் பனைகள் கோடைநிழல் போல் பருத்துச் செழித்த மாமரங்கள் என பலவகைப்பட்ட மரங்களினை தன்னகத்தே கொண்ட முட்டிதூக்கியன்கேணி என அழைக்கப்படும் பரந்த காணிப் பிரதேசம் மற்றும் நெல்வயல்கள் நடுவே அமைந்த மண்வாசனையுடன் பூத்துக்குலுங்கும் தாமரைக்குளம் என வளம் மிக்க வாழ்வதனை மேற்கொண்டார்.

திரு. வீரகத்தி சின்னத்துரை, மருதடியைச் சேர்ந்த சின்னத்தம்பி மகள் அன்னபூரணி என்னும் நங்கையை மணமுடித்து கிருஷ்ணபிள்ளை என்னும் மகனை 1914 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பதினெட்டாம் தேதி ஒரேயொரு வாரிசாகப் பெற்றனர். சின்னத்துரையர் தலையில் கட்டுக்குடுமியும், திடகாத்திரமான உடல்வாகும், கூர்மையான பார்வையும் கொண்டவராக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த இறை பக்தியிலும் தானதர்மத்திலும் சிறந்தவராக, ஆலய விழாக்காலங்களில் புராணபடனங்களை சிறப்புறப் பாடும் ஒருவராக சிறீமான் சின்னத்துரையர் இருக்கையில் அவர் மகன் கிருஸ்ணபிள்ளையோ மலர்ந்த முகமும் மென்மையான குணமும் தனக்கென தனித்துவமான நற்பண்புகளும் ஒருங்கே அமையப்பெற்றவராக இருந்தார்.

பிரித்தானியர்கள் உடுத்துறையில் மிஷனரி பாடசாலை ஆரம்பித்த காலங்களில் அதற்கு சவாலாக வத்திராயன் தெற்கில் சைவப் பள்ளிக்கூடத்தை (இன்று மருதங்கேணி அரசினர் இந்து தமிழ் கலவன் பாடசாலை என அழைக்கப்படுகிறது) உருவாக்கிய ஆரம்ப ஸ்தாபகர்களில் முக்கியமாகக் கருதப்படுபவரும் சட்டம்பியார் ஆறுமுகம் மகன் பொன்னையாவின் அன்பு மகளும், வத்திராயன் சைவப்பள்ளிக்கூடத்தில் ஆசிரியையாகப் பணிபுரிந்தவருமான சின்னம்மாவை இல்லத்துணையாகக் கைப்பிடித்தார் திரு. சின்னத்துரை கிருஷ்ணபிள்ளை. தொக்கடியார் பரம்பரையில் உதித்த கிருஷ்ணபிள்ளைக்கும் சட்டம்பியார் பரம்பரையில் உதித்த சின்னம்மாவுக்கும் ஒரேயொரு குழந்தையாக கண்ணின்மணியாக 1940 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23ஆம் திகதி வந்து பிறந்தார் அம்பிகாவதி. சிறு வயதிலிருந்தே ஒரே வாரிசான தந்தைவழிச் செல்வச்செழிப்பிலும் அன்னையின் கல்வியறிவூட்டலிலுமாக கள்ளம் கபடமில்லா செல்லக் குழந்தையாக வளர்ந்து வந்தார்.

ஒருவயதில் தனது தந்தையை இழந்துவிட்ட போதிலும் பேரனின் ஆதரவிலும் அன்னையின் அன்பிலும் தனது ஆரம்பக் கல்வியை இன்று உடுத்துறை மகாவித்தியாலயம் என அழைக்கப்படும் உடுத்துறைப் பள்ளிக்கூடத்தில் ஆரம்பித்தார். தான் பள்ளி செல்லும் காலங்களில் பேரனான சின்னத்துரையருடன் சமையல் செய்யவென செல்லப்பாக் கிழவன் என்று ஒருவர் இருந்ததாகவும், பள்ளிக்குச் செல்லும் தனக்கு அரிசிச்சோறு சமைத்து தந்துவிட்டு பேரனும் மற்றவர்களும் ஒடியல் மாப்புட்டும் மீன்குழம்பும் சாப்பிடுவார்கள் என்றும் எமதன்னை சொல்லிக்கேட்டிருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுத்துறையில் ஆரம்பக்கல்வியின் பின்னர் தனது கல்வியை சாவகச்சேரி ட்றீபேக் கல்லூரியில் தொடர்ந்தார். அன்னை கல்வி பயின்றுவரும் காலத்தில் அவரது பத்தாவது வயதில் தனது அன்புப்பேரன் சின்னதுரையரைக் காலனுக்குப் பறிகொடுத்தார்.

அதன் பின்னர் அன்னையின் அரவணைப்பில் வளர்ந்து திருமணப் பருவம் எய்தியதும் இலங்கையின் வடமாகாணத்தை சேர்ந்த கண்டாவளை எனும் பொற்பதியின் சாத்திரி சுப்பர் பரம்பரை எனும் பூர்வீகமூத்தகுடிப் பரம்பரையில் சாத்திரியாரின் பேரனான திரு. கந்தர் தம்புவுக்கும் நித்தியவேட்டையைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் மகள் வள்ளிப்பிள்ளைக்கும் மகனாக வந்துதித்த திரு. தம்பு சிதம்பரப்பிள்ளை எனும் ஆசிரியரை (பிற்காலத்தில் புகழ்பூத்த அதிபராகத் திகழ்ந்து இளைப்பாறினார்) 1959ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி தனது 19 வயதில் திருமணம் செய்து இல்லற வாழ்வதனை மேற்கொண்டார்.

இல்லறவாழ்வின் நற்பயனாக நவரத்தினங்களென கிருஷ்ணகுமார், சிவகுமார், அம்பிக்குமார், உதயகுமார், நந்தகுமார், உமாகுமாரி, பாமாகுமாரி, மீனாகுமாரி, சுகுமாரி என ஒன்பது குழந்தைகளைப் பெற்றுபெருவாழ்வு வாழ்ந்தனர். பிள்ளைகளை ஒழுக்கத்திலும் கல்வியறிவிலும் சிறந்தவர்களாக ஆக்கவேண்டுமென்பதில் இருவருமே ஒருமித்த எண்ணங்கொண்டு, **"எழுபிறப்பும் தீயன தீண்டா பழிபிறக்கப் பண்புடை மக்கட் பெறின்"** என்பதற்கமைய அவ்வாறேசெய்தும் காட்டினர்

தம் பிள்ளைகளை மட்டுமன்றி தனது சகோதரன், பெறாமக்கள் மற்றும் நண்பர்களின் பிள்ளைகள் என பலரை வேறுபாடின்றி தனது பிள்ளைகள்போல் வளர்த்து அவர்கள் கல்வி வளர்ச்சிக்கு உந்துசக்தியும் உறுதுணையாகவும் இருந்தார் எமதன்னை.அவ்வாறு பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு இன்புற்றிருந்த காலத்தில் 1999ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம் 27ஆம் திகதி கணவரின் திடீர் மறைவினால் அன்னை மீளாத்துயர் கொண்டார். அன்புக்கணவரின் பிரிவில் உடைந்துபோனாலும் குழந்தைகளின் எதிர்கால வாழ்வை எண்ணி துணிவுடன் தனியே குடும்பச்சுமையை தன் தோள்களில் தாங்கி தனது மகள்களைக் கரை சேர்த்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளான அகானா, மிதிலா, ஆதித்தன், சௌகார்த்திகா, சௌமித்ரா, ஆரபி, அட்சரன், அவ்யன், ஆதிரை, ஆரணி, மந்தரன், மைத்திரேயி, சௌபாக்யா, சாமந்தி, இலக்கியா, ஆயனன், சின்மயி, அனன்யா என்போருடனும் இனிதே தனது வாழ்நாளைக் கழித்துவந்தார். தமது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் கல்வியிலும் செல்வத்திலும் திறம்பட வாழ்வதைக்கண்டு மகிழ்வோடு இருந்தார்.
இருபது வருடங்களுக்குமேலாக தனது இரண்டாவது மகன் மற்றும் கடைக்குட்டி மகளுடன் கொழும்பில் வசித்தாலும் தனது பிந்தைய காலங்களை சொந்த ஊரான உடுத்துறையில் கழிப்பதையே அவர் பெரிதும் விரும்பினார். வவுனியாவில் தனது இளைய மகன் வீட்டில், உடுத்துறையில், கொழும்பில் என தனது இறுதிக்காலங்களினைக் கழித்தார்
.

2022 ஆம் ஆண்டு சனவரி 12ஆந் திகதி நள்ளிரவு 12.35 மணியளவில் (13ஆந் திகதி அதிகாலை) அன்னையின் இரண்டாவது மகன் திரு. சிதம்பரப்பிள்ளை சிவகுமார் கொழும்பு ஆசிரி மெடிக்கல் வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிர் இறந்த செய்தி நெஞ்சில் இடியென இறங்க ஆற்றமுடியா அந்த சோகத்தில் 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21ஆம் திகதி எதிர்பாராத விதமாக விடியற்காலை 4.30 மணியளவில் இரண்டாவது மகனின் வீட்டிலேயே அவரின் இரண்டாவது மகளின் மடியிலும் இளையமகளின் கைகளிலும் அன்னையின் உயிர் பிரிந்து எம்மை ஆளாத்துயரில் ஆழ்த்தியது.

அன்னை வாழ்ந்த சீரும் சிறப்பும் மிக்க பெருவாழ்வதனை எழுத்தில் வடித்துவிடமுடியாது. பழைய வீடு என்றதும் எமக்கு ஞாபகம் வருபவை நாலு பக்கமும் உயர்ந்த மண்சுவருடன் கூடிய களஞ்சிய அறையும் அதைச்சுற்றி அமைந்திருந்த விறாந்தைகளும் அகன்று உயர்ந்த மண்சுவருக்குள் அமைந்திருந்த மரத்தாலான அலுமாரியும் வீட்டின் மத்தியில் இருந்த அகன்ற தனிமரத்தூணும் அத்தோடு நாலு பெரிய கற்கள் கால்களாகத் தாங்க அதன்மீது அமைந்த பெரிய கருங்காலி மரப்பெட்டகமும் மறக்கமுடியாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் முன்னோர் பரம்பரையாக வந்தசொத்து ஆவணங்கள், பலநூற்றாண்டுகள் பழைமையான ஓலைச்சுவடிகள், கைமருத்துவக் குறிப்புகள், பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட புராதன நாணயங்கள், புத்தகங்கள் என பல பொக்கிஷங்களை அந்த மரப் பெட்டகத்தினுள் பூட்டிப் பாதுகாத்து வந்தனர். பழைய வீட்டிலிருந்த தனிமரத்தால் செய்யப்பட்ட நாலு உலக்கை போடக்கூடிய பெரிய உரலும் தனிக்கல்லினாலான குளியல்தொட்டியும் சலவைக்கல்லும் இன்றும் அதிசயமே. சூட்டுக்களத்துடன் அண்டிய வீட்டு விறாந்தையில் தொங்கவிட்டிருந்த கலப்பையும் களக்கட்டையும் வேலைக்காரன் தடியும் அரிவிச் சத்தகங்களும் இன்றும் பசுமையாக நினைவுக்கு வரும். (இடம்பெயர்வில் அவையாவும் அழிந்துபோனமை எமது துரதிர்ஷ்டமே)

.

முற்றத்தில் பல நூற்றாண்டுகளாக வானளாவ உயர்ந்து பரந்து நிழல் பரப்பி நின்ற கிளிச்சொண்டி மாமரம் பரம்பரையின் தொன்மையை பறைசாற்றும். வயல்களின் நடுவே அமைந்த அழகிய வற்றாத தாமரைக்குளமும் அடுக்கடுக்கான தென்னைகளும் பனைகளும் அழகுக்கு அழகுசேர்ப்பவை. இவை யாவும் எமதன்னை வாழ்ந்த செழிப்பான வாழ்வுதனை பறைசாற்றும்.

.

அது மட்டுமல்லாது, ஐரோப்பியர் இலங்கையை ஆண்ட காலங்களில் குறிப்பாக போர்த்துக்கேயர் சைவக்கோயில்களையும் வெளி வழிபாடுகளையும் தடைசெய்திருந்தபோது குலதெய்வமான வைரவரை வீட்டின் அகன்ற மண்சுவருக்குள் அலுமாரி அமைத்து அதனுள் பூட்டிவைத்து வணங்கிவந்தார்கள் என்பது சொல்வழிகேட்ட வரலாறு. அதுவே பின்னர் அலுமாரிசு ஞானவைரவர் என பெயர்வரக் காரணமாயிற்று. அமரர் தம்பூர்வீகக் குடிகளின் குலதெய்வமாம் உடுத்துறை தெற்கு அலுமாரிசு ஞானவைரவரை கணவரின் துணையுடனும் பின்னர் பிள்ளைகளின் துணையுடனும் தனது இறுதிக்காலம் வரை ஆதரித்து வந்ததார் அந்தப்பெரிய குடும்பத்தை, காணிவளவை கட்டிக்காக்கும் திறமை எமதன்னைக்கு மட்டுமே சாத்தியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவருக்கும் என்னென்ன பிடிக்கும் என்னென்ன பிடிக்காது என அதற்கேற்ப சமைப்பார். எவ்வளவு பேர் இருந்தாலும் அளவாக சுவையாக எல்லோருக்கும் பிடித்ததாகச் சமைப்பது அம்மாவிற்கு கைவந்தகலை. தையற்கலையிலும் அம்மா சளைத்தவரல்ல. எமது சிறுவயதில் அவ்வளவு வேலைகளுக்கு மத்தியிலும் தானே வடிவமைத்து வண்ண வண்ண ஆடைகள் தைத்து எமக்கணிவித்து அழகுபார்ப்பார். எந்த நேரமும் ஓய்வில்லாது ஓடியோடி ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டிருக்கும் அம்மாவே எங்கள் ஞாபகத்தில் வருவார்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள் என்று அனைவரிடத்திலும் அளவில்லா அன்புகொண்ட எமதன்னையின் "பிள்ளை!...என்னணை, "என்னப்பு..." "குட்டி..." என்ற செல்லமான அழைப்புகளை இனி நாம் எப்போது கேட்போம்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

## முரு கன் துதி

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
ஈராறுதோள்கள் போற்றி
காஞ்சி மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

## வைரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்ந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

## தேவாரம்

## திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன்
 சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி
 பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர்
 கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது
 நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்
வஞ்சம் இது ஒப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும் இடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

சதுரம் மறைதான் துதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்த எனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே.

குனித்த புருவமும்,கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்,
பணித்த சடையும், பவளம் போல் மேனியில் பால் வெண்
நீறும்,
இனித்தம் உடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே, இந்த மா நிலத்தே..

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பாதி மதிநதி போது மணி சடை
 நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
 பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
 மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
 காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
 காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
 சூழ வரவரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
 வாமி மலைதனி லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
 வேலை விடவல பெருமாளே.

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரி லாத பத்தி தனைமேவி
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே.

## திருப்புராணம்

உலகெலாமுணர்ந்து ஓதற்கரியவன்,
நிலவுலாவிய நீர்மலி வேணியன்,
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்,
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவம்.

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்


## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க!
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க !
குறைவிலாது உயிர்கள் வாழ்க !
நான்மறை அறங்கள் ஓங்க!
நற்றவம் வேள்வி மல்க !
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்

## திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலநூற்றாண்டுகள் பழமைவாய்ந்த கிளிச்சொண்டி மாமரம்



முட்டிதூக்கியன்கேணித் தாமரைக்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்மா!**

நாம் ஒன்பது பேர் சொன்ன
முதல் வார்த்தை....
அதுவே எமது முதல் மூன்றெழுத்துக் கவிதை....
நாம் பார்த்த முதல் முகம் அதுவே
இறைவன் கொடுத்த முதல் முகவரி....
நெஞ்சில் நிறைந்த முதல் ஓவியம்....
அறுபதிலிருந்து
எழுபத்தைந்து வரை
கருவுக்குள் ஒன்பதையும் அடைகாத்து உயிரூட்டி....
உதிரத்தை பாலாக்கி எமக்கூட்டி....
கண்ணன் வருவான் கதை சொல்லுவான்....
என்று பாட்டால் தாலாட்டி....
பல இரவுகள் நித்திரையின்றி....
இவ்வுலகுக்கு எம்மை அறிமுகப்படுத்தியவளே - நீயே
பூமியில் நாம் கண்ட முதல் தெய்வம்.
நீ எங்கள் குலதெய்வம் வைரவர்
கொடுத்த அரிய வரம்.
அம்மா
நீ இல்லை - ஆனால்
நீ இல்லாதது போலில்லை....
இதயமெல்லாம்
உன் நினைவு
நினைக்கும் போதெல்லாம்
விழியோரம் நினைவுத் துளிகள்
கண்ணீராய் கரைகிறது.
பழந்தோட்டம் முதல்
பனங்கிழங்குவரை....
வைரவர் பூஜையிலிருந்து
வயிறார உண்ட வரை....
வாயார காதோரம்
கதைபல கேட்டோம் - யாவும்
கை மீறி போனதுவே!
காலம் களவாடி விட்டதுவே!
படைத்தவன்
பாரபட்சம் இன்றி
பறித்துவிட்டான்.
எம்மிடமிருந்து
எட்டாத்தூரத்துக்கு
அனுப்பிவிட்டான்.
இனியொரு பிறப்பிருந்தால்
என்னை
உன் வயிற்றில் பெற்று விடு....
திரும்பவும் என் பிஞ்சுக்
கரம் பற்றி விடு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பான அக்கா!**

அக்கா, உன் அன்பான அரவணைப்பிலும், தன்னலம் இல்லா பாசத்திலும் கட்டுண்ட தம்பி தங்கை நாம். உன் அன்பு கொண்ட நெஞ்சம் ஒரு போதும் எம்மை விட்டு மறைந்து போகாது. இது இறைவன் கொடுத்த ஒரு உறவமைப்பு. உன் பிள்ளை போல் எமக்கு கல்வி அறிவு, வாழ்கை அறிவு புகட்டி நல்வாழ்க்கை வாழ வழிவகுத்த தெய்வங்கள் நீயும் அத்தானும் .எப்படி மறப்போம் உன் பிரிவை.
உனதன்புத் தம்பி தங்கை,

பரமதாஸ்
(ஓய்வுநிலை கிராம சேவக உத்தியோகத்தர், கண்டாவளை),
துவாரகாதேவி.

**வாழ்வு வழம்பெற அம்மாவிடம் கற்றுக் கொண்டவை**

* குலதெய்வம் வைரவர்மேல் வைராக்கியமான பக்தி
* எளிமை அடக்கம் இவை இரண்டினாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டவர்
* இயலாமையையும் இதயமுடன் உரைப்பவர்
* இன்பமோ துன்பமோ மனதளவில் இடம் கொடாமை
* தன் வலி மறந்த நிலையில் பிள்ளைகள் மேல் இறுதிவரை பாசமும் பற்றும்
* நோய் தேடி வந்தாலும் இடம் கொடாமை
* மன நிறைவுடன் ஒளிவுமறைவு இன்றிய நேர் மனப்பான்மை
* எல்லாமே கடந்து போகுமே தவிர அடித்தச்செல்ல இடம் கொடாமை
* கடமையை செய்வதில் இன்பம் கொண்டவர்

**இவற்றின் பயனாக அம்மா பெற்றுக்கொண்ட(பெறு)பேறு**

* என்பத்தொரு ஆண்டுகால ஆரோக்கியமான வாழ்வு
* நோய் என்று படுக்காத வைத்தியக்குறிப்பு ஆவணம் சுமக்காத வாழ்வு
* ஆசைப் பிள்ளையின் மடியில் இறுதி மூச்சு

* இதற்குமேல் மனித வாழ்வில் என்ன இலட்சியம்! என்ன சாதிப்பு! என்னபேறு!


"விழும்போது தூக்கிவிடுவோரும் தாழும்போது தோள் கொடுப்போரும் புன்னகையை பரிசளிப்போரும் புண்ணியம் செய்து வாழ்பவர்களும் கூட கடவுளின் வடிவங்களே..."

அம்மாவின் ஆத்மா அலுமாரிசு ஞான வைரவர் திருப்பாதக் கமலத்தில் நிறைவான உயர்வான மேன்மையான சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்

**அம்மாவின் வளர்ப்புப் பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவில்கின்றோம் நன்றி

உடுத்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டு ஆறாத் துயர் தந்து மீளாத் துயில் கொண்ட எமது அன்னை அமரர் திருமதி அம்பிகாவதி சிதம்பரப்பிள்ளை 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆம் திகதி அன்று இறையடி எய்திய செய்திகேட்டு எம் துயரை தம் துயராய் கொண்டு செயலாற்றிய உறவினர் நண்பர்கட்கும் நேரில் வந்து எமது துன்பத்தில் பங்குகொண்டவர்க்கும் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்க்கும் இத்துயர் செய்தி கேட்டு தூரத்தே இருந்து அனுதாப செய்திகளை தொலைபேசி மூலம் தெரிவித்தோர்க்கும் சமூகவலத்தளங்கள் மூலம் கவலைகள் தன்னை அறிந்திடச்செய்த அன்புடையவர்க்கும் வெளிநாடுகளிலிருந்து அமரர் தம் மக்கள் இல்லங்களுக்குச் சென்று அனுதாபம் தெரிவித்தோர்க்கும் தருணமறிந்து தகவுடன் உதவி ஒத்தாசைகள் பலவகையாய்ப் புரிந்த அனைவர்க்கும் உடுத்துறையில் இடம்பெற்ற சபீண்டிகரண கிரியைகளிலும் கொழும்பில் இடம்பெற்ற அந்தியேட்டி கிரியைகளிலும் கலந்து சிறப்பித்தோர்க்கும் நயம்பல செய்தும் நெஞ்சினில் தோன்றா நல்வியல்பினை தமக்கென உரித்துடையோர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.


**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

**30 1/3, றிட்ஜ்வே பிளேஸ்,**
**கொழும்பு-04**
**தொலைபேசி- 011 2582793**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org